ஆவடி மாநகராட்சி,
சென்னை – 54.

நாள் 28.06.2019

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு 2048 விகாரி வருடம் ஆணி திங்கள் 13–ம் நாள் ஜூன் 2019, 28–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆவடி மாநகராட்சி அலுவலக மாமன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் கீழ்க்காணும் பொருள் குறித்து முடிவெடுக்க நடைபெற உள்ளது.

**பொருள் எண். 1**

தமிழ்நாடு அரசிதழ் வெளியிட்ட நாள் 17.06.2019ன்படி ஆவடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி சட்ட விதிகளின்படி மாநகராட்சிக்குரிய 1) கணக்கு, (Accounts Committee), 2) கல்வி (Education Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance, Excluding Taxation Appeals Committee), 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) மற்றும் 6) பணிகள் (Works Committee) நிலைக்குழுக்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனவும், தமிழ்நாடு மாநகராட்சிகள் நிலைக்குழுக்கள் தோற்றுவித்தல் சட்டம் 1997 விதி 4–இன்படி மாநகராட்சிக்குள்ள பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து ஒவ்வொரு நிலைக்குழுவிலும் குறைந்த பட்சம் 6 முதல் அதிக பட்சமாக 15 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கலாம் எனவும் நிலைக்குழுக்களில் இடம் பெறும் மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அதில் பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணிக்கைகளின் விபரத்தினை மாமன்றத்தில் முடிவு செய்தும், மறைமுக தேர்தல் நடத்திட ஏதுவாக அதன் விபரத்தினை இணை இயக்குநருக்கு அனுப்பிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்த நிலையில் உள்ள 48 வார்டுகளை மட்டும் உள்ளடக்கி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் மேற்கண்ட 1) கணக்கு, (Accounts Committee), 2) கல்வி (Education Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance, Excluding Taxation Appeals Committee), 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) மற்றும் 6) பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழுக்கான மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை பின்வருமாறு நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிலைக்குழு விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கணக்கு | 3 | 3 | 6 |
| 2 | கல்வி | 3 | 3 | 6 |
| 3 | பொது சுகாதாரம் | 3 | 3 | 6 |
| 4 | வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் | 3 | 3 | 6 |
| 5 | நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு | 3 | 3 | 6 |
| 6 | பணிகள் | 3 | 3 | 6 |
| **மொத்தம்** | | **18** | **18** | **36** |

**அலுவலக குறிப்பு:**

1. இம்மாமன்றம் 1) கணக்கு, (Accounts Committee), 2) கல்வி (Education Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance, Excluding Taxation Appeals Committee), 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) மற்றும் 6) பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழு தலா 6 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவும், அவ்வுறுப்பினர்களில் 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும், மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நிலைக்குழுக்களிலும் தேர்ந்தெடுக்கப்படும் மாமன்ற உறுப்பினர்களில் அவர்களுக்குள் ஒருவரை மேற்படி நிலைக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் மாமன்றம் இசைவு தெரிவிக்கலாம்.
2. மேலும் மேற்கண்டவாறு இம்மாநகராட்சியின் 6 நிலைக்குழுக்களுக்கும் 36 உறுப்பினர்களை எண்ணிக்கையாக (Strength Fixaton) நிர்ணயம் செய்திட அரசின் அனுமதியினை பெறவும், மேற்கண்ட எண்ணிக்கையினை மாநில தேர்தல் ஆணையத்திற்கு தெரிவித்து மறைமுக தேர்தல் நடத்திடவும் இசைவு தெரிவிக்கலாம்

கோப்பு எண்: 6362 / 2019 /அ1

**தீர்மான எண். 01 அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது**

**பொருள் எண். 2**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பருத்திப்பட்டு ஏரியினை பசுமை பூங்காவாக மாற்ற ரூ28.15 கோடி மதிப்பீட்டில் பொது பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்படவுள்ளது. மேலும் இந்த பசுமை பூங்கா நகராட்சி பகுதியில் அமைந்துள்ளதால் பூங்காவில் உட்புறப்பகுதியில் உள்ள பூங்காவில் உள்ள அனைத்து கட்டுமானங்களையும் பராமரித்தல், பூங்காவில் உள்ள மரங்கள், புல் தரைகளை பராமரித்தல், மின் கட்டுமானங்களை பராமரித்தல், கழிவறை பராமரிப்பு செய்தல், குடிநீர் விநியோகம் மற்றும் கடைகள் பராமரிக்க ஆகிய பணினை நகராட்சி மூலமாக மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர் பொது பணி துறை நீர்வள ஆதார துறை, திருவள்ளூர் அவர்களின் கடித எண்.வ.பி/இவஅ–1/கோ.1 (பொது)/2019 நாள் 07.06.2019ல் அனுமதி அளித்து கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள தனியார் ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமனது. எனவே மேற்படி பணியினை மூன்று

ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும். ஓர் ஆண்டுக்கு மதிப்பீட்டு தொகை ரூ 55.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 012 அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது**

**பொருள் எண். 3**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பருத்திப்பட்டு ஏரியினை பசுமை பூங்காவாக மாற்ற ரூ28.15 கோடி மதிப்பீட்டில் பொது பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்படவுள்ளது. மேற்படி பூங்காவினை பராமரிப்பு பணி மேற்கொள்ளமாறும் மேலும் உட்புறத்தில் அமைந்தள்ள ஏரியில் பொது மக்கள் பொழுதுபோக்குக்காக படகு சவாரி மேற்கொள்ளுவதற்கும் அனுமதி வழங்கி செயற்பொறியாளர் பொது பணி துறை நீர்வள ஆதார துறை, திருவள்ளூர் அவர்களின் கடித எண்.வ.பி/இவஅ–1/கோ.1 (பொது)/2019 நாள் 07.06.2019ல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பணிக்கு அனுபவம், தகுதி வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்து நகராட்சி மூலம் "Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் ஒப்பந்ததாரரை தேர்வு செய்து மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்படுத்தி, உரிய ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒப்பந்ததாரர்களை அமர்த்தி, படகுகள் கொள்முதல் செய்து இயக்கி பராமரித்தல் பணியினை மேற்கொள்ள, தகுதியுள்ள ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விருப்பம் கோரி, உரிய விளம்பரம் செய்யவும், மேற்கொண்டு நடவடிக்கை தொடரவும் (Public Private and Partnership) தனியார் பங்களிப்பின் அடிப்படையில் திட்டத்தினை செயல்படுத்தவும், நகராட்சி நிர்வாக ஆணையரின் இசைவு மற்றும் அனுமதியினை (in principle approval) எதிர் நோக்கி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. படகு சவாரி செய்யும் பொது மக்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்.
2. ஏரியின் நீர் மாசுபடாத வண்ணம் பராமரிப்பு செய்திட வேண்டும்.
3. பராமரிப்பு மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு சீருடை, ESI மற்றும் PF வழங்கப்பட வேண்டும்.
4. பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் புகார்கள் பதிவிட பதிவேடுகள் பராமரிப்பு செய்திட வேண்டும்.
5. நகராட்சி அனுமதியின்றி படகுகள் எண்ணிக்கை கூட்டவோ, குறைக்கவோ கூடாது.
6. நகராட்சி அனுமதியின்றி கட்டணத்தை கூட்டவோ, குறைக்கவோ கூடாது.
7. படகு இயக்குதல் தொடர்பாகவும் பராமரிப்பு தொடர்பாகவும் உரிய துணை விதிகள் ஏற்படுத்தி கொள்ளவும் மாமன்றம் அனமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 03 அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோடை வறட்சி எதிர்கொள்ளும் விதமாக மாநில பேரிடர் நிவாரணை நிதி திட்டம் (SDRF 2019-20) கீழ் நிதியில் கீழ்கண்ட குடிநீர் பணிகள் மேற்கொள்ளள அவசியமாக இருப்பதால் அதற்காகும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதீப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | பிராமினர் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 2 | 3 | பஜனை கோயில் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 3 | 4 | கலைஞர் நகர் 5வது தெருவில் (OHT) புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 4 | 8 | சரஸ்வதி நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 5 | 8 | மூர்த்தி நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 6 | 9 | கலைஞர் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 7 | 9 | இந்திரா நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 8 | 9 | தாமரை நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 9 | 9 | மணிகண்டபுரம் கற்பகம்மாள் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 10 | 10 | வேணுகோபால் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 11 | 10 | பிள்ளையார் கோயில் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 10.00 |
| 12 | 11 | ராஜாஜி தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 13 | 12 | நர்மதா தெரு பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 14 | 13 | டி.எஸ்.பி குடியிருப்பு பின்புறம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.00 |
| 15 | 14 | சிவசக்தி நகர் எ செக்டார் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 16 | 15 | ரெட்டிபாளையம் OHT அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 17 | 15 | பெரியார் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 18 | 16 | லட்சுமிபுரம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 19 | 18 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதி செக்டார் 1 நூலகம் அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 20 | 18 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதி செக்டார் 2 புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 21 | 19 | சின்னம்மன் கோயில் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 9.50 |
| 22 | 19 | கள்ளுக்கடை தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 23 | 21 | பக்தவச்சலப்புரம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 24 | 24 | வார்டு எண் 24ல் நியாய விலை கடை அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.00 |
| 25 | 25 | இராமலிங்கபுரம் 1வது தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 8.50 |
| 26 | 26 | குமரண் நகர் கிழக்கு 2வது தெரு சந்திப்பில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.50 |
| 27 | 26 | காமராஜ் நகர் 7வது தெரு (கிழக்கு பக்கம்) புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 28 | 27 | சாஸ்திரி தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.00 |
| 29 | 27 | லாசர் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.50 |
| 30 | 28 | ஐய்யப்பன் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.00 |

| | | | |
|---|---|---|---|
| 31 | 28 | பள்ளி தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.00 |
| 32 | 30 | முத்துகிருஷ்ணன் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.75 |
| 33 | 31 | புத்தர் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 34 | 32 | நேதாஜி தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 35 | 34 | விவேகனந்தா தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.80 |
| 36 | 35 | ராமானுஜம் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 37 | 36 | பாரதிதாசன் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.00 |
| 38 | 36 | அம்பேத்கார் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.00 |
| 39 | 41 | ஐய்யப்பன் கோயில் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.20 |
| 40 | 42 | பாக்கியம்மள் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.50 |
| 41 | 43 | தேவராஜபுரம் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 6.20 |
| 42 | 44,47 | வார்டு எண் 44 பகுதி மற்றும் வார்டு எண் 47 கன்னகி தெருவில் புதியதாக இரண்டு ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 12.70 |
| 43 | 45,46 | வார்டு எண் 45 பாபு நகர் பகுதி மற்றும் வார்டு எண் 46 சாஸ்திரி நகர் அண்ணா தெருவில் புதியதாக இரண்டு ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 13.50 |
| 44 | 1 முதல் 48 | ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள பழுதடைந்து மின் மோட்டார்களை புதியதாக மாற்றி அமைத்தல் பணி | 25.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழுங்கலாம்.
2. மாநில பேரிடர் நிவாரணை நிதி திட்டம் (SDRF 2019-20) கீழ் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அல்லது நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மாமன்றம் தலைவர் அவர்கள் அனுமதி எதிர் நோக்கியும் தனி அலுவலர் அவர்கள் முன் அனமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 04 அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது**

**பொருள் எண். 5**

ஆவடி மாநகராட்சிக்கு 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட மாநகராட்சியாகும். இதில் 48 வார்டுகளையும், 9 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கியது. இதில் தற்போதிய மக்கள் தொகை சுமார் நான்கு இலட்சமும், 97585 வரி விதிப்புகளும் கொண்டதுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுறையின் படி தமிழக அரசின் சிறப்பு திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை தீவிரமாக செயல்படுத்தவும், குடிநீர் பற்றாக்குறையினை போக்கவும், மாநகராட்சி பகுதிகளில் அமைந்திருக்கும் அரசு கட்டிடங்கள், மருத்துவமனைகள், வணிக வளாகங்கள் மற்றும் தனியார்களுக்கு சொந்தமான வீடுகள் கடைகள், வணிக வளாகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகள் போன்றவற்றில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உள்ள கட்டிடங்களில் தற்போது உபயோகத்தில் உள்ளதா என சீறிய முறையில் ஆராய்ந்து பொது மக்களுக்கு விழப்புணர்வு ஏற்படுத்தி மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அனைத்து கட்டிடங்களினில் ஏற்படுத்தும் வண்ணம் அனைத்து அலுவலர்களும் செயல்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்ட நிலையில் இம்மாநகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதிகளில் அமைந்துள்ள மழைநீர் சேகரிப்பு செயல்பாட்டிலுள்ள கட்டிடங்களை கண்டறிந்து மழைநீர் அமைக்கப்பட்ட கட்டிடம் என விளம்பரம் மேற்கொள்ளும் வகையில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஸ்டிக்கர்கள் 40000 எண்ணிக்கை அச்சடித்திவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ2.70 இலட்சதில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 05 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு செப்டம்பர் 2018 முதல் ஜுன் 2019 வரை (10 மாதங்கள்) சோப்பு வழங்க கேட்டக்கொள்ளப்பட்டது. அதன்படி துப்புரவு ஆய்வர்கள் கோட்டங்கள் வாரியாக 10 மாதங்களுக்கு மொத்தம் 1640 சோப்புகள் வழங்க சான்று அளித்துள்ளனர். “அமுதம் பல்பொருள் சிறப்பங்காடி” யிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒரு சோப்பின் விலை ரூ.32.87 என்று குறிப்பிட்டுள்ளனர். ஏனவே மேற்படி நிறுவனத்திற்கு (1640x32.87) = 53906/-ஐ மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7995/18/எச்2

**தீர்மான எண். 06 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட நாட்களாக பொது இடங்களில் பல இடங்களில் குப்பைகள் பொது மக்களால் குவிக்கப்பட்டு தற்போது சுகாதார சீர் கேடு ஏற்படும் நிலையிலும், துார் நாற்றம் ஏற்படும் நிலையிலும் உள்ளது. மேற்படி இடங்களை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் பகுதிகளை நேரடி ஆய்வு செய்யும் பொழுது மேற்படி பகுதிகளில் வெகு நாட்களாக குவிக்கப்பட்டுள்ள குப்பைகளை மாநகராட்சி மூலம் உடனடியாக JCB இயந்திரம், Tipper வாகனங்கள் மற்றும் Mazdoor Category II மூலம் ஆகியவற்றினை உபயோகப்படுத்தி அப்புறப்படுத்தி மேற்படி இடங்களை மீட்டேடுத்து சுத்தமான நகரமாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே மேற்படி அமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் பேரில் மேற்படி பணிகளை கீழ்காணும் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. வார்டு எண் 1 முதல் 24 வரை உள்ள பகுதியில் குவிக்கப்பட்டு உள்ள குப்பைகளை அகற்றி பசுமை உரக்குடில் மையத்திற்கு கொண்டு செல்ல ஆகும் செலவின தொகை ரூ7.60இலட்சம்.
2. வார்டு எண் 25 முதல் 48 வரை உள்ள பகுதியில் குவிக்கப்பட்டு உள்ள குப்பைகளை அகற்றி பசுமை உரக்குடில் மையத்திற்கு கொண்டு செல்ல ஆகும் செலவின தொகை ரூ7.40இலட்சம்.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 07 <u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 8</u>**

ஆவடி மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டுமானம் முடிக்கப்பட்ட குடியிருப்புகள், வணிக வளாகங்கள் போன்றவைகளில் **மழைநீர் சேகரிப்பு முடிக்கப்பட்ட** கட்டிடம் என குறியீடு மேற்கொள்ளும் வகையில் மழைநீர் சேகரிப்பு சுவர் ஒட்டிகள் 40000 எண்ணிக்கை அச்சிட உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை 1000 ஸ்டிக்கர்களுக்கு |
|---|---|---|
| 1 | சூரிய டிஜிட்டல் பிரிண்டர்ஸ்,<br>எண் 3, 7வது தெரு, இந்திரா நகர், அம்பத்துார்,<br>சென்னை–53 | ரூ 6500/– |
| 2 | பிரீத்தி எண்டர்பிரைஸஸ்,<br>எண் 7, 5வது தெரு அம்பத்துார்,<br>சென்னை–53. | ரூ 6750/– |
| 3 | தீபக் டிஜிட்டல் பிரிண்டர்,<br>டிப்பு சாகிம் தெரு,<br>இராயப்பேட்டா, சென்னை. | ரூ 7000/– |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள சூரிய டிஜிட்டல் பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 08 அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

ஆவடி நகராட்சி 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சிறப்பு நிலை நகராட்சி தற்போது மாநகராட்சியாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமையப்பெற்றுள்ள அனைத்து எல்லை Reflective Sricker பெயர் பலகையினை மாற்றி ஆவடி மாநகராட்சி தங்களை அன்புடன் வரவேற்கிறது என புதியதாக பெயர் பலகைகள் தயார் செய்திட தோராய செலவினம் ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 09 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

ஆவடி நகராட்சி 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சிறப்பு நிலை நகராட்சி தற்போது மாநகராட்சியாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்ட Reflective Sricker தெரு பெயர் பலகையினை அமையப் பெற்ற ஆவடி மாநகராட்சி என்ற பெயரினை மாற்றி ஆவடி மாநகராட்சி என Reflective Sricker–களை கொண்டு 450 தெரு பெயர் பலகையினை பெயர் மாற்றம் செய்திட தோராய செலவினம் ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 10 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

ஆவடி மாநகராட்சிக்கு 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட மாநகராட்சியாகும். இதில் 48 வார்டுகளையும், 9 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கியது. இதில் தற்போதிய மக்கள் தொகை சுமார் நான்கு இலட்சமும், 97585 வரி விதிப்புகளும் கொண்டதுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுறையின் படி தமிழக அரசின் சிறப்பு திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை தீவிரமாக செயல்படுத்தவும், குடிநீர் பற்றாக்குறையினை போக்கவும், மாநகராட்சி பகுதிகளில் அமைந்திருக்கும் அரசு கட்டிடங்கள், மருத்துவமனைகள், வணிக வளாகங்கள் மற்றும் தனியார்களுக்கு சொந்தமான வீடுகள் கடைகள், வணிக வளாகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகள் போன்றவற்றில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்திட விழப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் (Rain Water

Harvesting Structure Notice) 100 Nos Book 40 எண்ணிக்கை அச்சிட தொழில் வணி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு பல்நோக்கு சேலை கூட்டுறவு சங்கம் என்ற அரசு கூட்டுறவு நிறுவனத்தின் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.75,000/– மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தொழில் வணி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு பல்நோக்கு சேலை கூட்டுறவு சங்கம் என்ற அரசு கூட்டுறவு நிறுவனத்தின் நேரடியாக கொள்முதல் செய்திடவும், அதற்குண்டான பட்டியல் தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 11 அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**தனி அலுவலர் / ஆணையர்**
**ஆவடி மாநகராட்சி**